உதவி அமர்வு நீதிமன்றம், மேலூர்

நாள் :01.12.2025

அ.சா.1 -வெங்கடேசன் S/o.சுப்புராயலு

S.C. No. 303/2021:

(சாட்சி மனுவில் பேரில் திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்)

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

மேற்படி வழக்கு சம்பந்தப்பட்ட சம்பவமானது, இரவு சுமார் 11.30 மணியளவில் நடந்தது. புகாரானது சம்பவம் நடந்து 2 நாட்கள் கழித்து மேலூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். சம்பவத்தன்று இரவே வண்டியோடு வந்து காவல்நிலையம் சென்ற புகார் கொடுத்தேன். ஆனால் வழக்கை எடுக்கவில்லை. விசாரித்து தான் எடுப்போம் என்று கூறிவிட்டார்கள் அதனால் 2 நாட்கள் கழித்து புகார் எடுக்கப்பட்டது. என்னுடைய புகார் முதல் நாளில் எடுக்கப்படவில்லை என்ற விபரத்தை காவல்துறையில் கொடுக்கப்பட்ட வாக்குமூலத்திலோ, புகாரிலோ குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லவில்லை. எண்ணெய் டப்பாக்கள் காணாமல் போனது எங்கு நடந்தது என்றால் திருச்சி-மதுரை தேசிய நெடுஞ்சாலையில் மேலூர் பேக்கரி பிரிவு அருகே நடந்தது. நான் புகார் கொடுக்கும் போது பேக்கரியிலும், அருகில் உள்ள இடங்களில் உள்ள கண்காணிப்பு கேமராவின் ஒளிப்பதிவினை பார்க்கும்படி காவல்நிலையத்தில் கூறினேனா என்றால் இல்லை. இரவு சுமார் 8.00 மணியளவில் திருச்சி வரும்வழியில் இடையில் லாரியை சுற்றி பார்த்தேன். என்னுடைய புகாரில் இரவு 8.00 மணி என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும். எத்தனை குற்றம் சாட்டப்பட்டவர்கள் சம்பவத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பதையோ

யாரெல்லாம் கைது செய்ப்பட்டிருக்கிறார்கள் என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. இதுதொடர்பாக காவலர்கள் என்னிடம் தெரிவிக்கவில்லையா என்றால் சென்றமுறை நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கும்போது தான் கூறினார்கள். எண்ணெய் டப்பாக்களை காவலர்கள் கைப்பற்றினார்களா இல்லை கைப்பற்றவில்லையா என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எண்ணெய் டப்பாக்கள் ஒப்படைக்கப்படவில்லை. நான் சொல்வது போல் அவ்வாறு எந்த சம்பமும் நடக்கவில்லை என்றும் அவ்வாறு சம்பவம் நடந்திருந்தால் முதல் நாளே புகார் அளித்திருப்பேன் என்றும் அது கற்பனையானது என்பதால் தான் 2 நாட்கள் கழித்து புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. எண்ணெய் டப்பாக்களை என்னுடைய முதலாளிக்கு தெரியாமல் நானே கையாடல் செய்துவிட்டு அதை மறைப்பதற்காக ஆஜர் எதிரிகள் மீது பொய்புகார் கொடுத்து குற்றம் சுமத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையாக கொடுத்த புகார் என்றால் எண்ணெய் டப்பாக்கள் ஒப்படைக்கப்பட்டனவா இல்லையா என்பது பற்றி கேட்டு தெரிந்திருப்பேன் என்றும் அது பொய் என்பதால் தான் அதை தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் ஆஜர் எதிரிகள் வழக்கில் இருந்து விடுவிக்கப்படவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.12.01 21:26:50 +0530

Assistant Sessions Judge

Melur